# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.86/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 17 | நாள் | : | 21.08.2025 |
| பெயர் | : | டாக்டர் நாகலட்சுமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21st day of August 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.10.2017 ம் தேதி நான் மருத்துவமனையிலிருந்தபோது அவசர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 23 வயதுடைய முருகன் மகன் ரஞ்சித்குமார் என்பவர் சிகிச்சை பலனின்றி அதே தினம் மதியம் 2.40 மணிக்கு இறந்துபோனார் அவரை பரிசோதனை செய்து இறப்பை உறுதி செய்துகொண்ட பின்னர் அந்த தகவலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலைய தலைமைக் காவலர் முத்துக்குமார் என்பவர் மூலம் வாசுதேவநல்லூர் காவல்

நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன். அவரது இறப்பு குறித்த நான் அனுப்பிய தகவல் அ.சா.ஆ.12 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை**

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலைய தலைமைக் காவலர் முத்துக்குமார் என்பவர் மூலம் வாசுதேவநல்லூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன் என்று நான் அடையாளம் காட்டிய அ.சா.ஆ.12 இவ்வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திருநெல்வேலி மாநகர ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திரு.இசக்கிமுத்து (Junior Assistant), The Principal District Court, Tirunelveli என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் முதல் நிலை எழுத்தர் நிலை எண்-1 முருகன் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.21 18:08:51 +0530